திரு. முனு ஆதி : முந்திய சர்க்கார் சில டாலுக் ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளைக் கட்டவேண்டும் என்று திட்டமிட்டு, பணம் ஒதுக்கியும், கட்டாமல் காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. அவைகளுக்கு முதல் இடம் கொடுத்து அரசாங்கம் உடனே நடவடிக்கை எடுத்து ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். கண்ணப்பன் : ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் என்று இருப்பதால், கிராமப் பகுதிகளிலுள்ள எல்லா மக்களுக்கும் மருத்துவ வசதி கிடைப்பதில்லை. ஆகையால் ரூரல் டிஸ்பென்சரிகளை அதிகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே குறிப்பிட்டது போல அரசாங்கத்தின் நிதி நிலைமை சீர்பட்ட பிறகு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

புலவர் க. முருகையன் : திருவையாறு தொகுதியின் தலைநகரம் திருவையாருக இருந்தாலும், அங்கே அரசினர் மருத்துவமனை ஒன்று இல்லை. தனிப்பட்ட வகையில்தான் நடக்கிறது. அதை சர்க்கார் ஏற்றுக் கொண்டு நடத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. எனவே, கனம் உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடவேண்டும்.

THIRU B. VENKATASWAMY : Hon. Deputy Speaker, Sir, may I know whether there is any proposal to employ Homoeopathy trained doctors in the maternity centres and hospitals?

THE HON. THIRU C. N. ANNADURAI : This Government is thinking of bringing forward a measure to regularise Homoeopathy system. When the measure is brought into force, the question will be considered.

நகர மன்றங்களின் வருமானம்

* 153 வினு.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

மு ப. (அ) நகர சபைகளின் வருமானத்தை அதிகரிப்பது எப்படி என்று ஆலோசனை கூற அரசாங்கம் ஏதேனும் கமிட்டி அமைத்துள்ளதா ?

(இ) ஆம், எனில் ; அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) வினு எழ இடமில்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இனிமேலாவது அப்படிப்பட்ட கமிட்டியை அமைக்க சர்க்கார் உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அரசாங்கம் 6—12—1965-ல் ஒரு தனி அதிகாரியை நியமித்தார்கள். அவர் அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிருர். அவருடைய முடிவு வந்த பிறகு இது ஆலோசிக்கப்படும்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் முடிந்து விட்டது. இன்னும் 15 நிமிஷங்கள் எடுத்துக் கொண்டு கேள்விகளை முடிக்க சபையின் அனுமதியைக் கோருகிறேன்.

1967 ஜூலை 4]

Dr. H. V. HANDE : Sir, when the D.M.K. Party was in opposition and when the Congress Party was in power, there was a talk about the levy of the octroi duty on petrol and other articles for the sake of theCorporation and other municipal bodies to augment their income so that they can implement welfare measures. Now that the D.M.K. Party has come into power, will they re-examine the whole issue and see that the octroi duty is levied to augment the resources of the Corporation and other municipal bodies?

The Hon. Thiru C. N. ANNADURAI : Though the Government by themselves have not made any study of the problem,I find that in places where thay have been levying the octroi duty, the present trend is to give it up.

திரு. ஆர். நாகசுந்தரம் : ஐயா, * * *

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. ஆர். நாகசுந்தரம் கேட்ட கேள்வி சட்ட மன்றக் குறிப்பிலே ஏறினல், சபையில் இப்படித் தவருன கேள்விகளைக் கேட்கிருர்கள் என்கிற எண்ணம் ஏற்படும். ஆகவே, அதை நீக்கிவிடுவது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. நாக சுந்தரம் கேட்ட கேள்வியை சட்டப் பேரவை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்றும், பத்திரிகைகளில் வெளியிட வேண்டாம் என்றும் ஆணையிடுகிறேன்.

திரு. நா. காசிராமன் : ஐயா, நகராட்சிகளுக்குக் கொடுக்கப்படும் மோட்டார் வாகன வரி, கல்விச் சலுகை இவை தனியார் பள்ளிகளுக்குக் கொடுக்கப்படுவது போல, நகராட்சிகளின் வருமானத்தையும் உயர்த்து வதற்கு வழிவகை செய்ய சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.

திரு. எஸ். ராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நகராட்சிகளின் வருமானத்தைப் பெருக்க நகராட்சியிலிருந்து சினிமாக் கொட்டகைகள் கட்டி நடத்த அனுமதி கேட்டால், அதைக் கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அத்தகைய எண்ணத்தை அரசாங்கம் பரிசிலித்து வருகிறது. தேவையானல், அது கவனிக்கப்படும்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி, "நகராட்சி யின் வருமானத்தைப் பெருக்க, ஒரு கமிட்டி அமைத்துள்ளதா" என்பது தான். வருமானத்தைப் பெருக்கும் யோசனைகளைச் சொல்லக் கூடிய கேள்விகளைக் கேட்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Thiru. T. MARTIN : Sir, may I request the Hon. Minister to state whether the Government will consider the take-over of the cinema houses in the municipal areas, if it is recommended by that Committee ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : திருமணம் ஆனபிறகு குழந்தை பிறப்பது பற்றி பரிசீலிக்கலாம்.

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.